REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—6 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம். ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The: "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 22உ செவ்வாய் (8—10—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 23உ புதன் (9—10—57) [இதழ் 99

மேலும் ரூ.300 கோடி வேண்டியிருக்குமாம்!

புதுடில்லி, அக். 7—

'இரயில்வே இலாகாவிற்கான இரண்டாம் திட்டத்திற்கு ரூ. 1,425 கோடி தேவைப்படும்' என்று, இரயில்வே மந்திரி செகஜீவன்ராம் இங்கு தெரிவித்திருக்கிறார்.

இது, ஏற்கனவே திட்டக்குழு ஒதுக்கிய ரூ. 1,125 கோடியைவிட ரூ. 300 கோடி அதிகம் என்றும், இதற்குக் காரணம் விலைவாசி ஏற்றம்தான் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

முதல் திட்டத்தில் நகர்த்தியதைவிட சுமார் 6 கோடி டன் சாமான்களை அதிகம் நகர்த்துவது என்பதே இரண்டாம் திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒரிசாவில் மதுவிலக்குச் சட்டத்திற்குச் சீட்டு?

மக்கள் ஒத்துழைப்பு கிட்டவில்லையாம்!

பெரும் வருமான நஷ்டம் ஏற்படுகிறதாம்!

செலவாகும் தொகையை ஐந்தாண்டுத் திட்டத்திற்காவது செலவிடலாமாம்!

மாநில சர்க்கார் முடிவு செய்துவிட்டதாகத் தகவல்

கட்டாக், அக். 7—

ஒரிசா மாநிலத்தில், மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடுவதென முடிவு செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஒரிசா மாநில காங்கிரஸ் சர்க்காரின் இந்த முடிவுக்கு, மதுவிலக்குத் திட்டம் தோல்வியுற்றது என்பதுமட்டுமின்றி, மதுவிலக்கினை அமுல் செய்வதற்காகச் செலவாகும் பெருந்தொகையை இரண்டாம் திட்டத்திற்குச் செலவிடலாம் என்பதும் காரணமாக அமைந்தன என்று கூறப்படுகிறது.

மதுவிலக்குத் திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லையாம்; திட்டத்தை அமுல் செய்ய ஏராளமான போலீஸ் தேவைப்படுகிறதாம்; இத்துடன், வருமான நஷ்டமும் ஏற்படுகிறதாம்! இந்த நிலை, திட்டத்திற்கு நிதி சேகரிக்க வேண்டியுள்ள இக்கட்டான நேரத்தில் அனுமதிக்க முடியாத ஒன்று என்றும் சர்க்கார் கருதுகிறதாம்.

இதனால், கோராபுட் மாவட்டத்தைத் தவிர இதர மாவட்டங்களில் மதுவிலக்கை ஒழித்துவிடுவது என்றும் சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

எத்தனைதான் கடுமையாக அமுல் செய்தாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவது பெருகியிருக்கிறது என்றும், எனவே மேலும் கடுமையாக மதுவிலக்கை அமுல் செய்ய ஏராளமான பணம் செலவிடவேண்டியிருக்கும் என்றும், இதற்கு நிதி வசதிகள் இல்லை என்றும் சர்க்கார் கூறியுள்ளதாம்.

இதுகுறித்து, பிரதேச காங்கிரஸ் கமிட்டி வரும் அக்டோபர் 12-ந் தேதி கூடி விவாதிக்குமாம்.

சக்திவாய்ந்த நீர்வளிக் குண்டு!

ரஷ்யா வெடித்ததாம்!

மாஸ்கோ, அக். 8—

புதிதாகத் தயாரித்துள்ள மிகவும் சக்திவாய்ந்த 'ஹைட்ரஜன் குண்டு' ஒன்றை நேற்று ரஷ்யா வெடித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்தக் குண்டு வெடிப்பின் காரணமாக ஜப்பானில் அதிர்ச்சி ஏற்பட்டதாம்; கதிரியக்க மழை ஏற்பட்டதாம்.

'ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்க இந்தி இன்னும் தகுதி பெறவில்லை'

'அவசரம் காட்டுவது ஆபத்தானது'

கே. எம். முன்ஷி கருத்து

அகமதாபாத், அக். 5—

'இந்தியை அவசர அவசரமாக ஆங்கிலத்தின் இடத்தில் அமர்த்துவது ஆபத்தானது' என்ற எச்சரிக்கையை, உ. பி. மாநிலத்தின் முன்னாள் கவர்னரான கே. எம். முன்ஷி தந்திருக்கிறார்.

"ஒரு தேசிய மொழி ஆவதற்குரிய தகுதிகளை இந்தி பெறு முன்னர், அதனை அவசர அவசரமாக, எதிர்ப்புக்கிடையேயும் ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை அமர்த்துவது, இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பதாகும்.

"கடந்த 150 ஆண்டுக் காலத்தில் ஆங்கிலம்தான், பல பிரதேச மக்களும் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ள பயன்பட்டு வந்திருக்கிறது. அப்படியிருக்க, அதன் இடத்தை, சிலர் கருதுகிறபடி அவ்வளவு சுலபமாக இந்தி நிரப்பிவிட முடியாது"

என்றும் அவர், குசராத் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

என்றாலும் முன்ஷி, இந்தி மட்டுமே தேசீய மொழி என்பது போல அடைமொழி தந்து பேசியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

'ஒருசிலருக்கே பலன் தரும்'

'மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யாது'

இரண்டாம் திட்டம் பற்றி லோகியா கருத்து

ஆக்ரா, அக். 7—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் மக்களில் மிகச் சொற்பப்பேருக்கே பலன்தரும், என்பதுடன், வருமானத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை மேலும் விரிவாக்கும்"

என்று, சோஷலிஸ்டுத் தலைவர் லோகியா இங்கு கூறியுள்ளார்.

"மேற்சத்தியமாகிவிட்ட ஒரு சில விரல்விட்டு எண்ணக் கூடியவர்களின் விருப்பத்திற்கு ஒப்பவே திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது; எனவே, அது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவாது. திட்டம் பரிதாபகரமாகத் தோல்வியுறும் என்பதில் சந்தேகமில்லை" என்றும், அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

"இப்போதையத் தேவை எல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதும், கல்வியறிவு வளரச் செய்வதும்தான்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னைக்கு 3,000 புதிய டெலிபோன்கள்

புதுடில்லி, அக். 7—

இரண்டாம் திட்டத்தின் முதல் ஆண்டில் தபால்-தந்தி இலாகாவின் செய்திப் போக்கு - வரத்து விஸ்தரிப்பு, திட்டமிட்டபடி நடைபெற்றது என்று பத்திரிகை குறிப்பொன்று கூறுகிறது.

முதல் ஆண்டில் மட்டும் இந்தியாவெங்கணுமாக 3,700 தபால் நிலையங்கள் துவக்கப்பட்டன என்றும் கூறப்பட்டுள்ளது.

'டெலிபோன் வசதிகள் செய்வதிலும் திட்டமிட்டபடி வேலைகள் நடந்தன; சென்னையில் மட்டும் 300 புதிய டெலிபோன்கள் தரப்பட்டன; மேலும் இந்த ஆண்டில், சென்னை மாநிலத்தில் 3,000 புதிய டெலிபோன்களும், டில்லியில் 5,000 டெலிபோன்களும் நிறுவுவதற்கு வேலைகள் நடக்கின்றன' என்றும் அக்குறிப்பு கூறுகிறது.

மேற்கு வங்கத்திற்கு

மேலும் ரூ. 10 இலட்சம் கடன்

புதுடில்லி, அக். 7—

சிறு தொழில் வளர்ச்சிக்காக மேற்கு வங்க மாநிலத்திற்கு டெல்லி சர்க்கார், மேலும் ரூ. 10·85 இலட்சம் வரை கடனாகவும், மானியமாகவும் ஒதுக்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

நாகார்ச்சுன திட்டத்தில் வேலை நிறுத்தம்

25,000 தொழிலாளர் கோரிக்கை

ஐதராபாத், அக். 8—

'வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.'

'ஆட்குறைப்பு கூடாது.'

'மலிவுத் தானியக் கடைகளைத் திறக்கவேண்டும்.'

என்பனபோன்ற அடிப்படைக் கோரிக்கைகளுடன் ஆந்திர மாநிலத்திலுள்ள நாகார்ச்சுன சாகர் திட்டத்தில் வேலை செய்யும் 25,000 தொழிலாளர்கள் கடந்த செப். 23-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை வேலை நிறுத்தம் செய்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

கடவுள் பெயரால் மோசடி செய்வதற்குச் சதி?

'பிரசாதம்' என்று கூறி விஷம் கலந்த பொரி தந்தார்களாம்!

சேலத்தில் இருவர்மீது வழக்கு

சேலம், அக். 6—

'கடவுள் பிரசாதம்' என்று கூறி மயக்கம் கொடுக்கக்கூடிய நஞ்சைக் கலந்த கடலைப் பொரியை, இரயிலுக்காகக் காத்துக்கொண்டிருந்த பிரயாணிக்குக் கொடுத்து சாப்பிடச் சொன்னதாக சுப்பிரமணியம், அப்பாவு என்ற இரண்டு பேர்வழிகளை சேலம் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

சேலம் டவுன் இரயில் நிலையத்தில் சேலம் ஜங்ஷனுக்குச் செல்வதற்காக, தங்கவேலு என்பவர் இரயிலுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்; அப்பொழுது அங்கு சுப்பிரமணியம், அப்பாவு என்ற இரண்டுபேர் வந்தார்கள்; எற்கெனவே பழகியவர்கள்போல் தங்கவேலுவிடம் அவர்கள் பேச்சுக் கொடுத்தார்கள்.

திருச்செங்கோட்டிலிருந்து வருவதாகக்கூறி, 'கடவுள் பிரசாதம்' எனச் சொல்லி வெல்லம் கலந்த கடலைப்பொரியைச் சாப்பிடுமாறு தங்கவேலுக்கு அவர்கள் கொடுத்தார்களாம். அதை வாங்கிச் சாப்பிட்ட தங்கவேலு 'கசக்கிறது' என்று கூறினாராம். 'வெல்லம் கலந்த கடலைப்பொரி எப்படிக் கசக்கும்?' என்றுகூறி மேலும் கொஞ்சம் கடலைப்பொரியைக் கொடுத்து அவர்கள் சாப்பிடச் சொன்னார்களாம். தங்கவேலு அதைச் சாப்பிட்டபின், மீண்டும் அது கசக்கிறது என்று கூறியிருக்கிறார். உடனே அவ்விருவரும் ஓட, ஆரம்பிக்கவே தங்கவேலு அவர்களைப் பிடித்துப் போலீசில் ஒப்படைத்தார்.

ஊமத்தை விதைத் தூள் கலந்த கடலைப்பொரியை அவர்கள் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக ஒருவழக்குப் பதிவு செய்து போலீசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (ந. கி.)

அகதிகள் முகாமில் சாராய வேட்டை!

போலீஸ் சோதனையின்போது கைகலப்பு: தடியடிப்பிரயோகம்

ஜம்மு, அக். 7—

ஜம்முவிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள 'போர்' அகதிகள் முகாமில் போலீசாருக்கும் — அகதிகளுக்குமிடையில் மோதுதல் ஏற்பட்டு அறுவருக்குக் காயம் ஏற்பட்டதென்றும், 17 அகதிகள் கைது செய்யப்பட்டனரென்றும், பலர் தலைமறைவாக ஓடிவிட்டனரென்றும் செய்தி தரப்பட்டிருக்கிறது.

அகதிகள் முகாமில் கள்ளச் சாராய வேட்டைக்காக கலால் இலாகா போலீஸ் சோதனை நடத்தி, சாராயம் நிரம்பிய பல பெரிய பீப்பாய்களைக் கைப்பற்றினாராம்.

இந்தச் சோதனையின்போது அகதிகள், போலீசாரைத் தாக்கித் தடுத்ததால், உடனே பெரிய போலீஸ் படையும், கண்ணீர்ப் புகைப்படையும் அழைக்கப்பட்டு, தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டு அமைதி நிலைநாட்டப்பட்டதாம்.

இந்தியாவின் ஆட்சி மொழி

கம்யூனிஸ்டுகளின் நிலை?

"இப்போதுள்ள நிலையில், எந்த ஒரு தனி மொழியும் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கமுடியாது"

என்று கம்யூனிஸ்டுக் கட்சி, இந்தியாவின் ஆட்சிமொழிபற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளது.

ஆனால், மத்திய அரசாங்கத்தின் மொழியாகவும், மாநில அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளவும் 'இந்தி' மொழி பயன்படுத்தப்படவேண்டும் என்பதில் கம்யூனிஸ்டுக் கட்சியின் 'அரசியல் ஆய்வுக் குழு' (போலிட்பீரோ) உறுப்பினர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு இல்லையாம்!

"நல்ல முன்னேற்றம் கண்டுள்ள—இலக்கியச் சிறப்பு பெற்ற பல மொழிகள் கொண்ட நாடே இந்தியா; எனவே, எல்லா மொழிகளையும் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்"

என்று, கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைபற்றி அஜாய் கோஷ் தெரிவித்துள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 8—10—57 செவ்வாய்

ஆதாரக் கல்வி--நிபுணரின் தீர்ப்பு

பஞ்சபாண்டவர்கள் எத்தனை பேர் என ஒருவன் கேட்டானும். கட்டில் கால்களைப் போன்று மூன்று பேர் எனக் கூறி இரண்டு விரல்களைக் காட்டினனும். அந்த அளவுடனும் நின்றுவிடாது, அவன், தரையில் ஒரு கோடிட்டு, அதையும் கலைத்துவிட்டானும். இதுதான் விடையளித்தவனுக்குள்ள பஞ்சபாண்டவர் பற்றிய தெளிவு.

இக்கோமாளியின் குழப்பத்திற்கும், ஆதாரக் கல்வியின் உள்ளடக்கம் பற்றி விளக்கமளிப்போரின் குழப்பத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை. மிக மிக நெருங்கிய ஒற்றுமை இருந்துவருகிறது.

இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சராக இருந்துவரும் அபுல் கலாம் ஆசாத் அவர்களுக்கும் ஆதாரக் கல்வி பற்றி திட்டவட்டமான கருத்து இருப்பதாகச் சொல்வதற்கில்லை. அவரும் தமக்கு விருப்பமான ஒரு புது விளக்கத்தைத் தருகிறார்.

அவர் தரும் விளக்கத்திற்கும், நடைமுறையில் இருந்துவரும் ஆதாரக் கல்வி பயிற்சிக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. கல்வி அமைச்சர் ஆசாத் அவர்களால் தரப்படும் விளக்கந்தான் ஆதாரக் கல்வி முறையாகும் என்றால், அத்தகைய ஆதாரக் கல்வியை அறிவு படைத்த எவரும் ஆதரிக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

ஆதாரக் கல்வியின் உள்ளடக்கம் பற்றி தெளிவான ஒருமித்த கருத்து தலைமைக் கல்வி அமைச்சருக்கும் இல்லாத நிலையிலேயே, தொடக்கக் கல்வியின் இறுதிக் கோட்பாடு ஆதாரக் கல்விதான் என இந்தியப் பேரரசு முடிவு கட்டிவிட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் அக்கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. இந்தியப் பேரரசும் தெளிவற்ற இக்கல்வி முறையைத் திணிப்பதில், தனது முழு ஆற்றலையும் பயன்படுத்திவருகிறது. இதற்காகப் பெருந் தொகையைச் செலவழித்தும் வருகிறது.

இந்தியப் பேரரசின் இந்த வீண் பிடிவாதப் பணிக்கு, மாநில அரசுகளும் ஒத்து ஊதி வருகின்றன. அவைகளும் தம் தம் அளவில், மக்களிடமிருந்து வருத்தி வசூலிக்கப்பட்டுவரும் வரிப் பணத்தில் ஒரு பகுதியை இந்த வீண் பணிக்கு விரயமாக்கி வருகின்றன.

இக்கல்விக் கூத்துக்கு, ஆதாரக் கல்வி நிபுணர்கள் எனத் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக்கொண்டிருப்பவர்கள் வேறு, கட்டியங் கூறி வருகிறார்கள். ஆதாரக் கல்வி, கல்வியின் விமோசன மார்க்கம் என அரசாங்கத்திற்கு ஒத்து தி வருகிறார்கள்.

இவ்வளவும், ஆதாரக் கல்வியின் உள்ளடக்கம் குறித்துத் தெளிவாகத் தெரிந்துகொள்ளாமலும், பிறருக்கு வரையறுத்துக் கூறாமலும் செய்யப்பட்டுவரும் செயல்களாகும். ஆதாரக் கல்வியின் உள்ளடக்கத்தில் தெளிவில்லை—அதன் விளைவு கண்டறியப்படவில்லை. ஆனால், ஆதாரக் கல்வியை ஆதரித்துப் பேசுவதிலும், அதை இந்தியத் துணைக்கண்டம் முழுதும் திணிக்க வேண்டும் என முயற்சிப்பதிலும், அதற்காகப் பெருந் தொகையைச் செலவிட்டுவருவதிலும் மட்டும் குறைச்சல் இல்லை. நிற்க.

ஆதாரக் கல்வி குறித்து கல்வி நிபுணர் ஒருவர், தமது கருத்தை 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற வகையில் தந்துள்ளார். அவர் கருத்து, ஆதாரக் கல்வி ஆதரவாளர்களுக்கு ஆத்திரமூட்டக் கூடியதாகும்.

அந்தக் கல்வி நிபுணர் தம் மிச்சையாக, நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆதாரக் கல்வியை ஆராய முற்படவில்லை. இந்தியப் பேரரசின் ஆணைப்படிதான் அந்தத் திருப்பணியை மேற்கொண்டு இருக்கின்றார்.

ஆதாரக் கல்வியின் உண்மையைத் தெரிவதற்காக, அக்கல்வி நிபுணர் இந்தியத் துணைக்கண்டம் முழுதும் சுற்றி அக்கல்வி பயிற்றுவிக்கப்பட்டுவரும் பள்ளிகள் பலவற்றை நேரில் கண்டுள்ளார். அவ்வாறு அவர் பார்வையிட்டதும் முன்னெச்சரிக்கையுடன் அல்ல. ஆதாரக் கல்வி பள்ளி ஆசிரியர்கள் எதிர்பாராவகையில் அப்பள்ளிகளைப் பார்வையிட்டுள்ளார்.

அப்பள்ளிகளை, முன்னெச்சரிப்பு இல்லாமல் பார்வையிட்டதுடன் இருந்துவிடாது, அங்குள்ள ஆசிரியர்களை, அக்கல்விமுறை பற்றி விசாரித்தும் உள்ளார். ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் முறையையும், அதற்கு மாணவர்கள் காட்டும் மாற்றத்தையும், அக்கல்வி முறையில் பெற்றோர்களுக்கு உள்ள விருப்பு வெறுப்பையும், தொடர்புடையவர்களை நேரில் கண்டும் கேட்டும் வந்தார் அந்த நிபுணர்.

அதிகாரத்தில் உயர்ந்த இடத்திலும், சமூகத்தில் உயர்ந்த இடத்திலும் உள்ளவர்கள் ஆதாரக் கல்வி பற்றி எத்தகைய கருத்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிவதிலும் அவர் கருத்துச் செலுத்தி இருக்கிறார். அவ்வாறு அறிவதில் அவர் வெற்றியும் பெற்று இருக்கின்றார். ஆதாரக் கல்வி குறித்து கண்டறிந்த காட்சிகளையும், விசாரித்தறிந்த உண்மைகளையும், தாம் நன்கு அறிந்துகொண்ட அளவுடன் அக்கல்வி நிபுணர் இருந்துவிடவில்லை. ஆதாரக் கல்வியின் பயனற்றத்தன்மையை, அதனால் விளைந்துவரும் அலங்கோலத்தை மிகமிகத் துணிவுடன் வன்மையாகக் கண்டித்தும் உள்ளார் அந்த நிபுணர்.

உண்மை அறியவேண்டும் என்ற நன்நோக்கத்துடன் ஒருவர் பணிபுரிவது அருபொருள். அதிலும் விழிப்புணர்வுடன் கூடிய இடையறு உழைப்புக்குப் பிறகு கிடைக்கப்பெற்ற உண்மையை, ஒளிவு மறைவு இல்லாமல், பிறர் விருப்பு வெறுப்புபற்றி கருதாமல், தனக்கு விளையக்கூடிய எதிர்காலப் பலாபலனை ஒருபொருட்டாக மதியாமல் வெளியிடும் துணிவு ஒருவருக்கு இருப்பது இக்காலத்தில் பெரிதும் அருபொருளாகும்.

ஆனால், இக்கல்வி நிபுணரோ, ஆதாரக் கல்வியின் தன்மையைப் பற்றி அறிவதில் காட்டிய ஆர்வத்தைப் போன்றே, தாம் கண்ட உண்மைகளைக் கூறுவதிலும் ஆர்வமுடையவராகவும், பெரும் துணிவுடையவராகவும் இருக்கின்றார். அவர் முடிவு—தீர்ப்பு மிகவும் கசப்பானது. ஆதாரக் கல்வி ஆதரவாளர்களுக்கு எரிச்சல் தரக்கூடியது—ஆத்திரமூட்டக் கூடியது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆதாரக் கல்வியைக் கல்லறைக்கு அனுப்பக்கூடியது.

கிராம மக்களுக்கு ஆதாரக் கல்வி—நகர மக்களுக்கு வேறு கல்வி என்ற அரசாங்க நடைமுறையை சுட்டிக்காட்டி, மக்கள் நல்லாட்சி கோட்பாட்டின் இறுதி இலட்சியத்திற்கு, இந்த ஒருதலைப்போக்கு முரணானது என அந்த நிபுணர் சாடியுள்ளார்.

ஆதாரக் கல்விப் பள்ளியின் ஆசிரியர்களில் பலர், பள்ளிக்குக் குறித்த காலத்தில் வரவேண்டுமே, தவறாமல் வரவேண்டுமே என்றுகூட எண்ணுவது கிடையாது என்று நிபுணர் எடுத்துக்காட்டியுள்ளார். குறிப்பிட்ட ஒரு ஆதாரப் பள்ளியில் பணிபுரிந்துவரும் இரண்டு ஆசிரியர்களில், ஒரு மாதத்தின் முதல் பதினைந்து நாட்களுக்கு ஒரு ஆசிரியர் ஓய்வு பெற்றுக்கொள்வதும், பின் பதினைந்து நாட்களுக்கு மற்றொரு ஆசிரியர் ஓய்வுபெற்றுக்கொள்வதும், ஒவ்வொரு மாதமும் நடைபெற்று வருகிறது என்று நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரப் பள்ளிகளைப் பார்வையிட வருகின்ற பெரிய மனிதர்களுக்கு முன்னால், பள்ளியின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி அழகுபடக் காட்டப்பட்டு வருகின்றன என்றும், அதை மட்டுமே கண்டு அப்பெரிய மனிதர்கள் ஆதாரக் கல்வியே சிறந்தது எனத் தவறாக முடிவுகட்டி வருகின்றனர் என்றும் அந் நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

கைத்தொழில் மூலம் கல்வி போதிப்பது என்பது வெறும் பகட்டு என்றும், அதனால் கல்வி போதனையும் கெடுகிறது—கைத்தொழில் கற்றல் என்பதும் கெடுகிறது என்றும், ஆதாரக் கல்வி பள்ளி ஆசிரியர்களில் பலர் தம்மிடம் எடுத்துரைத்துள்ளதாக, அந்த நிபுணர் அறிவித்துள்ளார்.

அதுவுமன்றி, சமூகத்திலும் அதிகாரத்திலும் உயர்ந்த நிலையில் இருப்பவர்களில் பலர், ஆதாரக் கல்வியைக் குறித்து வானளாவப் புகழ்ந்து பேசினாலும், தங்களுடைய சிறார்களை, வேறு பள்ளிகளுக்கே அனுப்பி வருகின்றனர் என்று நிபுணர் இயம்பியுள்ளார். 'மற்றவர்களின் குழந்தைகளுக்குத்தான் ஆதாரக்கல்வி மிகவும் சிறந்தது' என, ஒரு கல்வித்துறையினர் தம்மிடம் குறிப்பிட்டதாக, அந்த நிபுணர் எடுத்துக் காட்டியுள்ளார்.

பதினொன்கு வயதிலிருந்து பதினறு வயது வருவதற்கு முன் சிறுவர்களை கைத்தொழிலில் பயிற்றுவிப்பது பயனளிக்காது என்ற ஆராய்ச்சி முடிவை அக்கல்வி நிபுணர் எடுத்துக் காட்டி, இன்றைய ஆதாரக்

'கிராமத்திற்கு ஒரு கல்வி-நகரத்திற்கு மற்றொரு கல்வியா?'

'மாணவர் பருவம் வீணுகிறது---எதிர்காலமும் இருள் சூழ்கிறது'

'ஆதாரக் கல்வி வெறும் கேலிக்கூத்தே!'

'ஆதாரக் கல்வி' மீது நிபுணர் தீர்ப்பு

புதுடில்லி, செப். 21—

"நாட்டின் பிதா மகாத்மா காந்தி தெரிவித்த கருத்து என்று தங்களுக்குள்ள கண்மூடித்தனமான பற்றை வெளிப்படுத்திக் கொள்ள 'ஆதாரக் கல்வி' முறையைப் புகழ்ந்து ஆட்சியிலுள்ளவர்கள் பேசிவருகின்றனர்; அதனால், நாட்டிலுள்ள கல்வித்துறை மேதைகளும், போதுமக்களும் ஆதாரக் கல்விக்கு எதிர்ப்பு தெரிவித்ததை அலட்சியப்படுத்தி, எதிர்ப்பை ஒடுக்க இந்தியப் பேரரசு, 'நாட்டுப் பிதாவின் உள்ளக்கிடக்கையே ஆதாரக் கல்வி' என்று கூறி, அதனை அமுலாக்கத் திரைமறைவில் தீவிரம்காட்டி வருகிறது" என்று இந்திய அரசாங்கத்தின் கல்வி நிபுணர், தான் தயாரித்துள்ள அறிக்கையில் வன்மையாகக் கண்டித்துக் குற்றம் சாட்டியுள்ளார். அந்தக் கருத்துக்கள் இங்கு திரட்டித் தரப்பட்டுள்ளது:—

"இந்த ஆதாரக் கல்வி முறையைப்பற்றி வேறு சில நிபுணர்கள் ஆராய்ந்து தயக்கமின்றி கருத்தை உள்ளது உள்ளபடி வெளிப்படுத்துகையில், இதனை, 'கபட நாடகம்' என்ற கருத்துப்பட திட்டத்தைக் குறைகூறியுள்ளனர்.

"நகரப் பகுதிகளுக்கு ஒரு தனிப்பட்ட கல்விமுறையையும், கிராமப் பகுதிகளுக்கு ஒரு தனிப்பட்ட கல்வி முறையையும் உருவாக்கித் திட்டம் வகுப்பது அறிவுடைமையல்ல; நாட்டின் நலத்தைப்பற்றிக் கொண்டுள்ள குறிக்கோள் நிறைவேறுவதற்கு ஆக்கம் தருவதுமல்ல!

"நாட்டின் எல்லா மாநிலங்களிலும் உள்ள ஆதாரக் கல்வி முறையில் நடைபெறும் பள்ளிகளை முன்னறிவிப்பில்லாமல் சென்று பார்த்த பிறகு, ஆதாரக் கல்விமுறை பற்றிப் பெருமையாகக் கூறப்பட்ட சிறப்புகளுக்குச் சான்றாக, நல்லது எதும் கூறமுடியவில்லை.

"இத்தகைய ஆதாரப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஒழுங்காகக் குறித்த நேரத்தில், பள்ளிகளுக்கு வரவேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. ஒரு பள்ளியின் இரண்டு ஆசிரியர்களில் ஒருவர் முதல் 15 நாட்கள் பள்ளிக்கு வரவில்லை; அவர் வந்ததும் மற்றொரு ஆசிரியர் அடுத்த 15 நாட்கள் ஓய்வு பெற்றார்.

"இத்தகைய ஆதாரப் பள்ளிகளுக்கு வரும் பார்வையாளருக்குக் காட்டப்படும் நடப்பு நிகழ்ச்சிகளைக்கொண்டு, ஆதாரக் கல்வி முறையைப் பற்றி கற்பிக்கப்பட்ட கருத்தை உண்மை என்றே கருத வேண்டிய நிலை சாதாரணமாக ஏற்படுகிறது.

"உண்மையில், இந்த ஆதாரக் கல்வி பள்ளியில் பயில்ற மாணவர்கள், சாதாரணப் பள்ளிகளில் படித்த மாணவர்களைவிடப் பின் தங்கியிருப்பதுடன் மட்டுமல்லாது தங்களுக்குக் கற்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் கைத்தொழில்களிலும் திறமையும், தேர்ச்சியும் இல்லாதவர்களாக உள்ளனர்.

"ஆதாரக் கல்வி ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர், 'தொழில்முறைக் கல்வி என்பது, விழாக்களின்போது வருகை தரும் பார்வையாளர்களின் பொருட்டே ஒரு முழக்கமாகவும், ஏமாற்று வித்தையாகவும் அமுல் செய்யப்பட்டுள்ளது' என்று நம்புகின்றனர்.

"நாட்டிலுள்ள பல கிராமங்களைச் சுற்றிப் பார்த்த பின்னர், 'ஆதாரப் பள்ளிகளில் கைத்தொழில் கற்பிக்கப்படுகிறது என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகும்' என்றுதான் கருத வேண்டியுள்ளது. பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்கள் எளிதாகக் குறிப்புகள் தருவதுபோல, தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கும் எளிதாகக் கைத்தொழில் திறமைகாட்ட முடிகிறது; ஆனால், மாணவர்கள் காலத்தை வீணாக்கிக்கொண்டு, தேர்ச்சியும் திறமையும் இல்லாது இருக்கின்றனர்; படிப்பைப் பற்றியோ, அறிவைப் பற்றியோ இரண்டாவதாகத்தான் அக்கறை காட்டப்படுகிறது.

"மற்றவர்களுக்கு ஆதாரக் கல்வியைப் பற்றி பரிசு செய்பவர்களில் ஒரு சிலரும், பெரிய பதவியில் இருப்பவர்களில் ஒரு சிலரும் ஆதாரக் கல்வியின் நன்மைக்கு எடுத்துக்காட்டாக தங்கள் பிள்ளைகளை ஆதாரக் கல்வி முறையில் பயிலச் செய்ய அந்த ஆதாரக் கல்வி பள்ளிகளுக்கு அனுப்புவதற்கு முன் வருவதில்லை.

"'ஆதாரக் கல்வி, மற்றவர்களின் பிள்ளைகளுக்கே நல்ல கல்வி முறையாகும்' என்று இவர்களில் ஒருவர் என்னிடம் குறிப்பிட்டார்.

"ஆதாரக் கல்வி முறையை விரும்புகிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்று நிபுணர்கள் தெளிவாக அறிவித்துள்ளனர்.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆதாரக் கல்வியே நாட்டின் கல்விமுறை என்று, அதன் நடைமுறை பற்றியோ, விளைவுகள் பற்றியோ மதிப்பிடாமல், கொள்கையாக ஏற்கப்பட்டது; அரசாங்க நிர்வாகத் துறையினர் தீவிரமாக அதனைத் துரிதப்படுத்தினர். மாநிலத் தலைவர்கள், கவர்னர்கள், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் ஆகியோர் ஆதாரக் கல்வியை வரவேற்று, 'அதுவே சிறந்தது' என்று கூறினர். இதனால் அதிகாரிகளும் அதற்குப் பக்கவாத்தியம் வாசிக்க வேண்டியதாயிற்று.

"ஆதாரக் கல்வியில் வெளிப்படையாக உற்சாகம் காட்டியவர்களிடம் பல பொறுப்பான பதவிகள் தரப்பட்டு, நிபுணர்கள் என்ற நிலைக்கு அவர்களை உயர்த்தி, அவர்கள் விருப்பத்திற்குக் காரியங்கள் நடைபெற்றன; சாதாரணமாக கல்வி நெறியாளர்கள் இதில் தொடர்பு கொள்ளவில்லை.

"மகாத்மா காந்தியின் பெயரை வேறு, இந்தக் கல்வியுடன் தொடர்புபடுத்தியதால் நிலைமை, சிக்கலையும் மோச நிலையையும் அடைந்துவிட்டது. மகாத்மா

(4-ம் பக்கம் பார்க்க)

கல்வி முறையின் பயனற்றத் தன்மையைக் கண்டித்துள்ளார். ஆதாரக் கல்வியை மீண்டும் ஆராய்ந்து பார்த்து முடிவு கட்ட வேண்டும் என்றும் அவர் வேண்டிக் கொண்டுள்ளார்.

பொதுவாக இந்தியப் பேரரசும், குறிப்பாக சென்னை மாநில அரசும், இந்த நிபுணரின் முடிவை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

தி. மு. கழகத்தின் இன்றைய வளர்ச்சி:

'கட்டிக்காக்க நம்மால் ஆகுமா என்ற அச்சம் தருகிறது'

'வளர்ந்துவரும் இயக்கத்தால் நாடு முழுப்பயன் பெறவேண்டும் என்பதே என் கவலை'

'சட்டசபை புகழ்பற்றி கவலைப்படவில்லை'

திருவண்ணாமலை மாநாட்டில் அண்ணா விளக்கம்

"தி.மு. கழகத்தின் இன்றையவளர்ச்சி, நம்முடைய நண்பர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கின்றது; நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூட பெருமையோடு அதுபற்றி இங்கு குறிப்பிட்டார்கள்; ஆனால் நான் உங்களிடத்திலே ஒன்று சொல்லிக் கொள்வேன்—எனக்கு இந்த வளர்ச்சி பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்காமல் இல்லை; ஆனால் அதேநேரத்தில்பயத்தையும்கவலையையும் கூடவே அளித்துக்கொண்டு தான் இருக்கின்றது. இவ்வளவு வளர்ந்திருக்கின்றோம் நாம்; இவ்வளவு பெரிய கழகத்தைக் கட்டிக்காப்பாற்றுவதற்கு நாமெல்லாம் ஆற்றல் உள்ளவர்களா என்ற எண்ணம் என்னுடைய உள்ளத்திலே அவ்வப்போது உறுத்திக் கொண்டிருக்கின்றது.

"உங்களிடத்திலே வெளிப்படையாகச் சொல்லிக்கொள்வதிலே நான் வெட்கமடையவில்லை; சட்டமன்றத்திலே திறமை பெறமுடியுமா முடியாதா என்பதைப்பற்றி எங்களுடைய உள்ளத்திலே என்றையத்தினமும் ஐயப்பாடு ஏற்பட்டதில்லை; அதிலே, 'நல்லவர்கள் அல்ல' என்ற பெயர் எடுத்தாலும் கவலையில்லை; ஆனால், இவ்வளவு இலட்சக் கணக்கான மக்கள் சிற்றூர்களிலேயுள்ள மக்கள்—பேரூரிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் — மதிப்புக்குரிய தாய்மார்கள் —பொறுப்புள்ள பெரியவர்கள் —ஆர்வங்கொண்ட இளைஞர்கள் — படித்த இளைஞர்கள் —நல்ல அலுவல்களிலே உள்ளவர்கள்-இவர்களெல்லாம் ஆதரவு தருகிற அளவுக்கு இந்த இயக்கத்தை கட்டிக் காப்பாற்றி, முழுப் பலனை நாடு அடையத்தக்க வகையிலே நடத்திச் செல்லுவதற்கேற்ற ஆற்றல் எனக்கு உண்டா என்பதில்தான் எனக்கு ஐயப்பாடு; நம்முடைய நாவலருக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட வேண்டுமே என்பதிலே எனக்குக் கவலை; எங்களுடைய கரங்களை நீங்கள் அந்தவகையிலேதான் வலுப்படுத்த வேண்டும்.

"ஏழையினுடைய வீட்டில் அழகான பெண் பிறந்து, அவள் 16-வயதாகி திருமணம் ஆகாவிட்டால், அந்த ஏழையினுடைய உள்ளத்தில் எப்படிக் கவலைதோன்றுமோ, அதைப்போல வளர்ச்சியடைந்த இயக்கத்தைப் பார்க்கின்ற நேரத்திலெல்லாம் நான் கவலையடைகின்றேன். ஏழையினுடைய வீட்டில் பெண் பிறந்தால் ஆபத்து; அந்தப் பெண் அழகாகவும் இருந்தால் அதிகமான ஆபத்து"

—என்று அண்ணா அவர்கள், 22—9—57-ல், திருவண்ணாமலையில் நடந்த வ. ஆ. மாவட்ட தி. மு. கழக மூன்றாவது மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்கள். (பேச்சின் முற்பகுதிகள் முன்பே வெளிவந்துள்ளன; இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது.)

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"தி. மு. கழகம் இன்றைய தினம் அடைந்திருக்கின்ற வளர்ச்சி மாற்றுக்கட்சிக்காரர்களை பல்வேறு மாதிரியான தாக்குதல்களிலே ஈடுபடவைக்கிறது. இது வரையிலே அவர்கள், நாம் வளர்ச்சியடைய முடியாதவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள்; நடைபெற்ற தேர்தலிலே நாம் ஈடுபட்டவுடன், இந்தத் தேர்தலிலே ஏற்படுகிற பளுவினாலேயும் பாரத்தினாலேயும் தொல்லையினாலேயும் நாம், துவண்டு போய்விடுவோம்—நாம் தோற்கடிக்கப்பட்டுப் போய்விடுவோம்—நாம் தான்தான் ஆக்கப்பட்டுவிடுவோம் என்றெல்லாம் கருதினார்கள். ஆனால் நாட்டு மக்களில் 17 இலட்சம் பேர் நமக்கு வாக்களித்திருக்கின்றார்கள் என்பதையும், 15 பேர் சென்னை சட்ட மன்றத்திலே இடம் பெற்றிருக்கின்றார்கள்; 2 பேர் பாராளு மன்றத்திலே இடம் பெற்றிருக்கின்றார்கள் என்பதை மட்டுமல்ல—தேர்தல் காலத்திலே இல்லாத அளவுக்கு இன்றையத் தினம், பெரியதோர் வளர்ச்சி—நல்லதோர் வளர்ச்சி தி. மு. கழகத்திற்கு நாட்டிலே எல்லாப் பக்கங்களிலேயும் ஏற்பட்டுக் கொண்டுவருகின்றது என்பதையும் அவர்கள் பார்க்காமல் இல்லை.

"நம்மை நிழலைப்போல பின் தொடர்ந்து வருகின்ற சர்க்கார் ஒற்றர்கள், நான் தவறாமல் நடக்கின்ற நம்முடைய நிகழ்ச்சிகளைப் பற்றி சர்க்காருக்கு அறிவிக்கின்றார்கள்.

"எந்தெந்த, இடத்திற்கு நாம் செல்லுகின்றோம் — எந்தெந்த நேரத்தில் செல்லுகின்றோம்—எந்தெந்த நேரம் வரையிலே நாட்டுமக்கள் தி. மு. கழகக் கருத்துக்களைக் கேட்பதற்கு ஆவலோடு இருக்கிறார்கள் என்பதிலே ஒன்றை மட்டுமே அறிந்தால்கூட, நாம் வளர்ச்சியடைந்திருக்கிறோமா இல்லையா என்பதை நாட்டு மக்கள் தெரிந்துகொள்வார்கள்; ஆளுகின்ற கட்சிக்காரர்களும் தெரிந்துகொள்வார்கள். ஆகையினால், தி. மு. கழக வளர்ச்சியைப் பற்றி இன்றையத்தினம் யாருக்கும் ஐயப்பாடு இல்லை.

"நாம் மிகச் சாமான்யமானவர்கள்; நம்மிடத்திலே கிடைத்திருக்கின்ற இந்த இயக்கம் நம்முடைய கட்டுக்கும் அடங்காத அளவுக்கு இன்றையத் தினம் வளர்ந்திருக்கின்றது. வளர்ச்சிக்கேற்ற அளவுக்கு நம்முடைய இயக்கத்திலே பலனைப் பெற வேண்டுமென்றால்—நான் சாதாரணக் கணக்கைச் சொல்லுகின்றேன்—திங்கள் ஒன்றுக்கு தலைமைக் கழகத்தில் 5,000 ரூபாயாவது செலவிட்டால்தான் முடியும்; அந்த அளவுக்குப் புதிய பொறுப்புக்கள்—அந்த அளவுக்குப் புதிய நிலைமைகள்—அந்த அளவுக்குப் புதிய வேலைகள் நம்முடையக் கழகத்துக்கு ஏற்பட்டுவிட்டன. அன்றாடம் வருகின்ற கார்டு கவர்களுக்குமட்டும் நம்முடைய கழகத் தோழர்கள் பதில் எழுதுவதென்றால், ரூ. 10-க்கு தபால் கார்டு வாங்கினால் தான் முடியும்.

"இன்றையத் தினம் இந்த ஊரிலிருந்து புறப்படுகின்ற நானோ, தருமலிங்கமோ, சம்பத்தோ நாளைக்கு ஒரு ஊர்—மறுநாள் ஒரு ஊர் என்று தமிழ்நாடு பூராவும் சுற்றிவிட்டு, மறுபடியும் திருவண்ணாமலைக்கு வரவேண்டுமென்றால்—நீங்கள், நான் சொல்லுவதிலே ஆணவம் இருப்பதாகக் கருதாதீர்கள்; உண்மையிருக்கிறதென்பதை ஆராய்ந்து பார்த்தால் உணர்ந்துகொள்வீர்கள்—மறுபடியும் திருவண்ணாமலைக்கு வரவேண்டுமென்றால் 5 வருடத்திற்குப் பிறகுதான் வர முடியும். அத்தனை இடங்களிலே வேலையிருக்கிறது.

"எந்தெந்த இடங்களிலே கிளைக் கழகங்கள் திறக்கப்பட்டன என்று கணக்குபார்ப்பதற்குக்கூட நேரமில்லாத அளவுக்கு தி. மு. கழக நடவடிக்கைகள் வளர்ந்து கொண்டே யிருக்கின்றன. நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை என்னாலே ஒரு திங்களுக்கு இரண்டு தடவைதான் பார்க்க முடிகின்றது; நடராசன் அவர்களை 10 நாளைக்கு ஒரு தடவை—20 நாளைக்கு ஒரு தடவைதான் பார்க்க முடிகின்றது; சம்பத்து தான் சொல்லாமல் கொள்ளாமல் டெல்லிக்கு ஓடிவிட்டான்—அவன் டெல்லிக்கு பாட்சா! 6 மாதத்திற்கு ஒரு தடவை அவன் இஷ்டப்பட்டால் வருவான்; இல்லையென்றால் நாம் போய்ப் பார்க்க முடியாது—அவ்வளவு தொலைவிலேயிருக்கிறான். எதற்கு நான் இதைச் சொல்லுகிறேனென்றால், அவ்வளவுக்கு நமக்கு வேலையிருக்கின்றது. இவைகளையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் கருதுவார்களானால், அவர்கள், தமிழ்நாட்டு அரசியலைப் புரிந்துகொள்ளாமல் திடீரென்று ஒரு நாளைக்கு ஏமாற்றத்தாலே தாக்கப்படுவார்கள்.

"அந்த அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கின்ற நம்முடைய கழகத்தைக் கட்டிக் காப்பாற்றுவதற்கு நீங்களெல்லாம், உங்களாலான எல்லா வகையான உதவியையும்—கேட்கின்ற நேரத்திலே யல்ல - உங்களுக்குக்கிடைக்கின்ற நேரத்திலேயெல்லாம் நீங்கள் அவ்வப்போது சேமித்துவைக்க வேண்டும்.

"உங்களுக்கு நான் சொல்லுவேன்—நான் சொன்ன அந்த ஏழை, தன்னுடைய வயிற்றிலே பிறந்த நல்ல அழகான பெண் பருவமடைந்துவிட்டாள் என்று தெரிவதற்கு முன்னாலேயே, அவள் பருவமடைவாள்—திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறக்கின்ற பொழுதே அவன், தான் கஷ்டப்பட்டு சேர்க்கின்ற சொத்தில் கொஞ்சம் கொஞ்சம் மிச்சப்படுத்தி, 'அடுத்த தைக்குக் கல்யாணம்—அடுத்தத் தைக்குக் கல்யாணம்' என்று சேர்த்து வைப்பதைப்போல், இங்கே கூடியிருக்கின்ற நீங்களும், இங்கே வரமுடியாமலிருக்கின்ற மற்றவர்களும், சீமான்களல்ல என்பது எனக்குத் தெரியும்; நீங்களெல்லாம் கஷ்டக் குடும்பத்திலே உள்ளவர்கள்—நான் உணர்ந்திருக்கின்றேன்; நாமெல்லாம் நடுத்தரக் குடும்பத்தார்கள்—இதிலே ஒருவருக்கொருவர் பெருமை பேசிக்கொள்ளத் தேவையில்லை; கஷ்ட ஜீவனத்தில் இருப்பவர்கள்—ஆனாலும், ஏழை எப்படி தன்னுடைய மகளுடைய திருமணத்திற்காகக் கொஞ்சம் கொஞ்சம் பணத்தை அவ்வப்போது சேர்த்துக்கொண்டு வருவானோ அதைப்போல், தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தி. மு. கழக ஆதரவாளர்கள் தொழிலிலே கிடைக்கின்ற வருமானத்திலே ஒரு சிறு பகுதியையாவது தி. மு. கழக வளர்ச்சிக்கென்று—தி. மு. கழகப் பொறுப்புக்கென்று ஒதுக்கிவைத்துக்கொண்டே வந்தாக வேண்டும்.

"நீங்கள் அப்படிப்பட்டவிதத்திலே எங்களுக்குக் கைக்கொடுத்தாலொழிய, பெரிய வளர்ச்சியடைந்துவிட்ட பிறகு—இந்த வளர்ச்சி பெற்ற இந்த இயக்கத்துக்கும், இதை நடத்திச் செல்கின்ற எங்களுடைய சிறிய தன்மைக்கும் பொருத்தமில்லாமல் இந்த இயக்கம் சிதறுண்டு போய்விடக்கூடும்.

"ஆகையினால்தான் வளர்ந்திருக்கின்ற இந்த இயக்கம் சிதறுண்டு போகாமல் இதனுடைய முழுப் பலனை நாம் அடைய வேண்டுமென்றால், தி. மு. கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்களும்—தி. மு. கழகத்திற்கு ஆதரவு காட்டுகிறவர்களும்—தி. மு. கழகக்

(4-ம் பக்கம் பார்க்க)

தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழு முடிவுகள்

29-9-57 பிற்பகல் 2-மணிக்கு துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் தென் ஆற்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் பண்ணுருட்டியில், இராஜாஜி தெரு, எண்-11 இல்லத்தில் நடைபெற்றது; அதுபோது நிறைவேறிய தீர்மானங்களாவன :—

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உற்றதுணையாய் நின்று பணியாற்றியவரும் கழகக் கொள்கைகளை நாடெங்கும் கலைத்துறை வாயிலாகப் பரப்பி வந்தவரும் நம் அரும் தோழருமான கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், தூத்துக்குடி தோழர் தாளமுத்து, தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களின் சகோதரர் கே. ஏ. அருணாசலம், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் மாமனார் எஸ். இராமலிங்கம், தோழர் கண்ணதாசன் அவர்கள் தாயார், விழுப்புரம் சண்முக உடையார் அவர்களின் மனைவியார் தையநாயகி, வழக்கறிஞர் இளம்வழுதி அவர்களின் மனைவி விசாலாட்சி இவர்கள் இயற்கையெய்தியதற்கு இக்குழு மிகவும் வருந்துவதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தென்னாற்காடு மாவட்டத்தில் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்ற தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். செல்வராசு, கள்ளக்குறிச்சி நடராசன், எம். ஆனந்தன் ஆகியவர்களை இக்கூட்டம் மனமாரப் பாராட்டுவதுடன், அபேட்சகர்களுக்கு உறுதுணையாய் இருந்து பணியாற்றிய தோழர்களுக்கும், கிளைக் கழகத்தினர்களுக்கும், வாக்காளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில், தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள நிலைமைகளை ஆராய்ந்ததற்கேற்ப மாவட்டச் செயலாளரும், மற்ற நிர்வாகிகளும், கிளைகளுடனும், தலைமை நிலையத்துடனும் மேலும் நெருங்கிய தொடர்பு கொண்டு கழகப் பணியைத் தீவிரமாகச் செய்ய வேண்டுமென்று மாவட்டச் செயலாளரைக் கேட்டுக் கொள்வதென இக்குழு தீர்மானிக்கிறது.

தென்னாற்காடு மாவட்ட மூன்றாவது தி. மு. கழக மாநாட்டை நடத்த விருத்தாசலத்தைத் தேர்ந்தெடுத்ததுடன், மேற்படி மாநாட்டிற்கு வரவேற்புக் குழு தலைவராக ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்களையும்; செயலாளர்களாக சாத்தமங்கலம் சொக்கலிங்கம், விருத்தாசலம் முனிசாமி ஆகியவர்களையும்; பொருளாளராக செல்வராசு எம். எல். ஏ. அவர்களையும்; தொண்டர்படைத் தலைவராக பெண்ணாடம் பெரியதம்பி அவர்களையும் இக்குழு தேர்ந்தெடுத்துள்ளது. அத்துடன், மாநாட்டை 1957 டிசம்பர் இரண்டாவது வாரத்தில் நடத்துவதென்றும், மாநாட்டிற்குத் தலைவராக மதுரை எஸ். முத்து அவர்களையும், திறப்பாளராக கே. கே. நீலமேகம் அவர்களையும் கேட்டுக்கொள்வதென இக்குழு தீர்மானிக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 10/57

அக்டோபர் 13: இந்தி எதிர்ப்பு நாள்

நாடெங்கும் கொண்டாடுக!

இந்தியப் பேரரசு தென்னகத்தின்மீது இந்தியைத் திணிக்கும் அநீதியை எதிர்த்து, 1957 அக்டோபர்—13, ஞாயிற்றுக் கிழமையை 'இந்தி எதிர்ப்பு நாளாக'க் கொண்டாடுமாறு தி. மு. கழகக் கிளைகளையும், துணை அமைப்புகளையும், தென்னாட்டின் நலனிலும், திராவிட மொழிகளின் நலனிலும் அக்கறை கொண்ட பிற அமைப்புகளையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்று இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்—பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்துவதோடு, இந்தியை எதிர்க்கும் தீர்மானத்தை நிறைவேற்றி அதன் ஒருபடியை இந்தியப் பேரரசின் உள்நாட்டமைச்சருக்கும், மற்றொரு படியை மாநில அரசியலாருக்கும், வேறொரு படியைத் தலைமைக் கழகத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

அமைதிக்குக் கேடு விளையாத வகையில், கண்ணியத்தோடும்—கட்டுப்பாட்டோடும் கடமையாற்ற வேண்டுகிறோம்.

30—9—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★



அறிவுடைநம்பி-லலிதா கலப்பு மணம்

தோழர்(புலவர்) அறிவுடைநம்பி அவர்கள் கடந்த 30—8—57 அன்று பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில், கடலூர் காலஞ் சென்ற வழக்கறிஞர் வெங்கட்ராமன் அவர்கள் செல்வியும், வேதாரண்யம் கன்யா குருகுலம் ஆசிரியையுமான தோழியர் லலிதா அவர்களை மாயவரம் கோமதி திரைப்பட மாளிகையில் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

திருமணத்திற்கு வந்திருந்த அனைவரையும் மணமகனின் தந்தை திரு. கே. எஸ். ஒப்பிலாமணி, குடவாசல் தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வரவேற்றனர்.

மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் அன்பில்-தருமலிங்கம், இரெ. பாலகுருசாமி, காட்டூர் இராமையா, குடந்தை சின்னத்தம்பி, குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி, ந. கிட்டப்பா ஆகியோர் வாழ்த்துரைத்தார்கள்.

திருமணத்தன்று அண்ணா அவர்களும், தோழர்கள் மு. கருணாநிதி, தில்லை-வில்லாளன் ஆகியவர்களும், மற்றும் இயக்கத் தோழர்கள் பலரும் வந்திருந்து சிறப்பித்தார்கள்.

மணமக்களுக்குப் பல தி. மு. கழகக் கிளைகளும், படிப்பகங்களும், நண்பர்களும், வாழ்த்துரை வழங்கியும், பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தார்கள். மணமகன் நன்றி நவில மணவிழா இனிது நிறைவேறிற்று.

இம்மணத்தினையொட்டி நாகையில் 3—9—57 அன்று பதிவுத் திருமணம் மாவட்டப் பதிவாளர் முன்னர் நடைபெற்றது; அன்று பிற்பகல் நாகை தி. மு. க. செயலாளர் தோழர் கே. வி. இராமன் அவர்களாலும், இரவு தஞ்சை தி. மு. க. செயலாளர் தோழர் பட்டு அவர்களாலும் மணமக்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. இயக்க நண்பர்கள் பலரும் கலந்துகொண்டனர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 30 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

★

நன்றி அறிவிப்பு

30—8—57-ல் நிகழ்ந்த எங்கள் மணவிழாவிற்குத் தலைமை ஏற்று வாழ்த்துரைத்த பேராசிரியர் க. அன்பழகர் அவர்கட்கும், மற்றும் வாழ்த்துரைத்தும், கலந்துகொண்டும் சிறப்பித்த தோழர்கள் அனைவருக்கும், பரிசுகள், சுவடிகள் வாழ்த்துப்பாக்கள், வாழ்த்துத் தந்திகள் முதலியன வழங்கிய கழகங்கட்கும், நண்பர்கட்கும், எங்கள் இதயங்கனிந்த நன்றியை உரிமையாக்குகின்றோம்.

லலிதா
அறிவுடைநம்பி



மாணவர் ஆட்சி மன்றத் திறப்பு விழா

29—9—57-ல் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் சார்பிலுள்ள வள்ளலார் இல்லத்து மாணவர்களுடைய ஆட்சி மன்றத்தின் (பார்லிமெண்டு) திறப்பு விழா நடைபெற்றது; திரு. ஜி.ஈ. முத்திருளாண்டி ஐ. ஏ. எஸ்., கொடியேற்றி வைத்தார்; திரு. கே. முத்துவெங்கடாசலம் தலைமையில் திரு. ஏ. கே. சுப்பிரமணியம் பிள்ளை திறந்து வைத்தார்கள்.

திரு. டி. ஜி. நம்பியப்பன், மாணவ அமைச்சர்களுக்கும், தலைவர்களுக்கும் உரிய ஆடைகளை வழங்கினர்.

பின்னர் அவர்கள் யாவரும் சென்னை அரசாங்கத்தின் சட்டத் துறையைச் சேர்ந்த திரு. பி. முருகன் அவர்களிடம் உறுதிமொழி எடுத்த பின்னர் அமைச்சர்கள் ஒவ்வொருவரும் புத்தாண்டில் தாங்கள் மேற்கொள்ள இருக்கும் திட்டங்களை விளக்கிப் பேசினர்.

திரு. எஸ். அருணையப்பன் அவர்கள் ஆட்சிமன்றத்தின் உறுப்பினர்களும் அமைச்சர்களும் மேற்கொண்டு நடக்கவேண்டிய அறிவுரைகளைக் கூறினர். திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், திரு. டி. தில்லைவேலு முதலியார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திரு. வா. தி. மாசிலாமணி நன்றி தெரிவித்தார்.

'தென்பகுதி' அமைப்புக்கு
கேரளத்தின் எதிர்ப்பு

திருவனந்தபுரம், அக். 7—

'தட்சிணப் பிரதேசம் ஏற்படும் என்பது வெறும் பகற்கனவேயாகும்' என்று கேரள முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்னை முதலமைச்சர் காமராசர் கூறிய கருத்துக்கு எதிராக மேலும் அவர் கூறுகையில், 'இப்போது பதவியிலுள்ள கேரள அரசாங்கம் இத்தகைய முயற்சியை எதிர்த்தே தீரும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தூத்துக்குடியில் சிறப்புக் கூட்டம்

★

13—10—57 மாலை 4-மணியளவில், தூத்துக்குடி டேல்பின் தியேட்டரில் தோழர் இரா. கிருட்டினன் தலைமையில் ஓர் சிறப்புக்கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் க. அன்பழகன் எம்.எல்.ஏ., கி. மனோகரன், சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அவ்வமயம், மும்முனைப் போராட்டத்தில் பாதிக்கப்பட்டோர்க்கு தோழர் எம். எஸ். சிவசாமி நிதி வழங்குவார்.

கிராமத்திற்கு.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தியின் கருத்துக்களைப் பின்பற்றி வருவதாகக் கூறிவரும் இவர்கள், அதே காந்தியார், கல்வியைப்பற்றிக் கொண்டிருந்த மற்ற கருத்துக்களை ஏற்காமல் தட்டிக் கழித்தனர்.

"மத்திய—மாநில அரசாங்கத்தில் உள்ள நிபுணர்கள், வெளிப்படையாக—உள்ளதை உள்ளவாறு, அரசாங்கத் திட்டத்திற்கு எதிரான கருத்தை வெளியிடுவதற்கு அஞ்சினர்; ஆனால் அவர்கள் ஆதாரக் கல்வி பற்றி ஆராய்ந்து, அதன் சிறப்புகளை மதிப்பிட்டு அறிவிக்கக் கடமைபட்டவர்களாவர்.

"இந்த ஆதாரக் கல்வி ஒரு அவசிய திடீர் ஏற்பாடாக உள்ளது; எல்லோருக்கும் சமமான வாய்ப்பு அளிப்பதற்குத் திட்டப்பட்டதல்ல; அநீதியானது; பிறப்பின் காரணமாக, நிலைக்கும் இடத்திற்கும் ஏற்றவாறு கல்வி கற்பிக்கும் கொடுமை நிரம்பியது.

"கிராமங்களில் உள்ளவர்களுக்குக் கல்வி அறிவைத் தரும் நோக்கத்துடன் தீட்டப்பட்டதாகக் கூறப்படும் இந்த ஆதாரக் கல்வி, அவர்களை மேல் படிப்புக்கு இலாயக்கற்றவர்களாக ஆக்குவதுடன் எத்தகையக் கைத்தொழிலிலும் அவர்களைத் திறமையற்றவர்களாக்கும் நிலையை நீடிப்பதுமாகும்.

"உற்பத்திப் பெருக்கத்திற்கு சிறுவயதிலிருந்தே கைத்தொழில் அறிவையூட்டுவதுதான் சாதகமான சூழ்நிலையை உண்டாக்கும்—என்று, ஆதாரக் கல்வியை வரவேற்பவர்கள் கூறுகிறார்கள். இப்படிக் கருதுவதும் முழு உண்மையல்ல; சிறுவர்கள் 14, 16 வயதை அடையுமுன் தொழில் கல்வி அறிவு பயன் தராது என்று ஆராய்ச்சித்துறை அறிவிக்கிறது.

"சிறுவயதில் தொழில் கல்வி அறிவு பயில்வது இறுதியில் தொழிற் கல்வியை வெறுக்கும் நிலையை உண்டாக்கும். வேட்டையாடும் உணர்ச்சியை ஊட்ட ஒருவன், பூனைக்குட்டியை எலிகள் மத்தியில் தூக்கி எறிய, அந்தப் பூனைக்குட்டி தன் காலம் முழுவதும் எலிகளைக்கண்டால் அஞ்சி நடுங்கும் நிலை ஏற்பட்ட கதை போன்று உள்ளது, இன்று ஆதாரக் கல்வி பயிலும் மாணவர் நிலையும்!"

மேலும் அக்கல்வி நிபுணர், 'அவசரப்பட்டு திட்டத்தை உருவாக்கக்கூடாது' என்ற எச்சரிக்கையை தனது அறிக்கையின் விடுத்துள்ளார். தெரிவித்துள்ளார்.

மத்தியக் கல்வி அமைச்சரவையும், திட்டக் குழுவினரும் உடனடியாகஇந்த நிலையை உணர்ந்து நகர, கிராம மக்களுக்கு ஒரே மாதிரியான கல்வி முறையை அமுலாக்க வேண்டும் என்றும், அதற்கான ஆக்கவேலைகளில் உடனடியாக ஈடுபடவேண்டுமென்றும், தற்போதுள்ள ஆதாரக் கல்வியில் குறைகள் நிறைந்து காணப்படுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.
12 : காவேரிப்பட்டினம்
13 : கோவை
14 : ஆனைமலை
வேட்டைகாரன் புதூர்—மாலை
பொள்ளாச்சி—இரவு
15 : கோபிசெட்டிப்பாளையம்
16 : சென்னிமலை
20 : காஞ்சிபுரம்—கலைக்கழகம்
21 : கீழ் எழாச்சூர்
22 : நீரளூர்
25 : கொருக்குப்பேட்டை
26 : சென்னை—மயிலாப்பூர்
30 : கோடம்பாக்கம்

முன்னாள் துணைத் தலைவருக்கு
7 ஆண்டுகள் சிறை!

யூகோஸ்லாவியாவின் முன்னாள் துணைத் தலைவரான மிலோவன் டிஜிலஸ், தேசத் துரோகி என்று குற்றம்சாட்டப்பட்டு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்; தண்டனையில் ஓராண்டுக்காலம் முடிந்துவிட்டது.

கம்யூனிஸ்டுத் தலைவர்களை 'ஒரு புதிய வகுப்பினர்' என்று ஒரு புத்தகம் எழுதியதற்காக அவர்மீது மீண்டும் 'விரோதப் பிரச்சாரம்' செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத்தொடரப்பட்டது.

வழக்கு விசாரணை முடிந்தது; அவர் அனுபவிக்க வேண்டிய இரண்டு ஆண்டுகள் தண்டனை முடிந்ததும் தொடர்ந்து 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து!

இரண்டு இலட்சம் பேர் விலகிக் கொண்டனராம்!

ரோம், அக். 4—

1954-ல் இத்தாலியில் மொத்தம், 22 இலட்சம் பேர் கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினர்களாக இருந்தனர் என்று மதிப்பிடப்பட்டது.

இப்போது 2 இலட்சம் உறுப்பினர் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலகிக்கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1956-ல் இருந்ததைவிட 9·8 சதவிகிதமும் 1954-ல் இருந்ததைவிட 20 சதவிகிதமும் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது என்று கம்யூனிஸ்டுக் கட்சிக் குழு அறிவித்துள்ளது என்று, 'லே யூனிடா' என்ற இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வேலைநிறுத்தம் எப்படி சட்டவிரோதமானது?

அரசாங்கத்திற்கு நீதிமன்றம் தாக்கீது

"வாழ்க்கைச் செலவு உயர்வைச் சமாளிப்பதற்கு முன்னைய ஏற்பாட்டின்படி நஷ்டஈடு தர வேண்டும் என்று கோரியதும், மேற்கு வங்க ஊழியர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தமும் எவ்வாறு சட்டவிரோதமானதாகும்?" என்று, மத்திய அரசாங்கத்தை கல்கத்தா நீதிமன்றம் கேட்டுள்ளது.

"ஊழியர்களின் கோரிக்கைகளைத் தனி நீதிமன்றப் பரிசீலனைக்கு விட்டதற்கான நியாயத்தையும் காட்டவேண்டும்" என்றும் மத்திய அரசாங்கத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வங்க பாங்கி ஊழியர் வேலைநிறுத்தம்

மேலும் நீடித்து வருகிறது

கல்கத்தா, அக். 8—

20 நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் கல்கத்தாவிலுள்ள 32 பாங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களின் வேலைநிறுத்தம் மேலும் நீடித்து வருகிறது.

கழகக் கூட்டங்கள்

★

ஈரோடு:
கோட்டை தெப்பக்குளம் மைதானத்தில்
9—10—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
எஸ். அப்பாவு
ஈ. ஏ. மதார்சா
எஸ். எம். எஸ். இப்ராகிம்

★

குளக்காட்டுப்புதூர்:
அழகிரி திடலில்
9—10—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: என். சோக்கலிங்கம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
முத்துக்கருப்பன்

கட்டிக்காக்க......

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கருத்து உண்மையிலேயே நாட்டுக்குத் தேவைதான் என்று உள்ளூர எண்ணுகின்றவர்களும் தங்களுடைய வருவாயிலே—தங்களுடைய அறிவிலே—தங்களுடைய ஆற்றலிலே — தங்களுடைய உழைப்பிலே—தங்களுடைய நேரத்திலே — தங்களுடைய அன்பிலே சிறுசிறு பகுதிகளை—துளித்துளிப் பகுதிகளை தி. மு. கழகத்திற்தென்று உரியதாக்கிவிட வேண்டும்.

"பணமில்லாதவர்கள்—பண்பு அதிகம் பெற்றவர்கள்—பணம் பெற முடியவில்லையே என்ற கவலையிலே இருப்பவர்கள், பணமில்லாத காரணத்தாலே, 'நாங்கள் என்ன செய்யலாம்?' என்று அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. தி. மு. கழகம் பணத்தால் மட்டும் வளர்ந்த கட்சியல்ல. நாம் தனிப்பட்ட முறையிலும் வளர்ந்திருக்கிறோம்; கூட்டுமுறையிலும் வளர்ந்திருக்கிறோம்.

"மாற்றார்களுடைய மனம் வெடிக்காமல் இருக்க வேண்டுமானால், உண்மையிலேயே நம்முடைய வளர்ச்சி இதற்குமேலே இருக்காது என்று தெரிந்தால் தான், அவர்கள் ஆயாசத்தை அடக்கிக்கொள்ளுவார்கள்; இல்லாவிட்டால் மெத்த வருத்தப்படுவார்கள்.

"எனவே, இன்றுமுதலே, நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்—தி. மு. கழக வளர்ச்சிக்கேற்ற வகையில் நீங்கள் உங்கள் அறிவையும் ஆற்றலையும், உங்களுடைய நேரத்தையும் நினைப்பையும், உங்களுடைய செல்வத்தையும் உழைப்பையும் ஒவ்வொரு சிறு கூறு—ஒவ்வொரு சிறு பகுதி இன்றுமுதலே ஒதுக்கிவைக்க வேண்டும்.

"தி. மு. கழகம் எடுத்துக்கொள்ளுகின்ற எல்லா நல்ல காரியங்களுக்கும் நாட்டு மக்கள் ஆதரவளிக்கின்றார்கள்; அந்த ஆதரவு இன்னும் அதிகப்படத்தக்க வகையில் தி. மு. கழகத் தோழர்கள் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்களுக்கு நல்ல உற்சாகத்தையும்—ஊக்கத்தையும் — ஆர்வத்தையும் தரத்தக்க வகையிலே திருவண்ணாமலையிலே நம்முடைய நண்பர்கள் நல்ல எழிலுள்ள மாநாட்டை நடத்தினார்கள் — அவர்களுக்கும் நன்றிகூறி விடைபெற்றுக் கொள்ளுகின்றேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.